கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.138/2022 வா.சா.1 தமிழ்செல்வன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 14.10.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் இடைஞ்சல் கொடுப்பதால் அவ்வாறு இடைஞ்சல் கொடுக்க கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து தற்போது விளையாட்டு மைதானமாக உள்ளது என்றால் சரியல்ல. தற்போது அதனைச் சுற்றி வேலி அமைத்துள்ளேன். வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறேன் என்றால் முகவர் தங்கராஜ் என்பவரிடம் இருந்து நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம். வழக்கு சொத்து ஆதியில் தமிழக அரசுக்கு சொந்தமாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எனில் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆதியில் மணியம் என்பவருக்கு பட்டா படி பாத்தியமாகி இருந்தது. அவரிடமிருந்து வெங்கிடுசாமி கிரையம் பெற்றார் . பின்னர் வெங்கிடுசாமியின் முகவரிடமிருந்து நாங்கள் கிரையம் பெற்றோம்.

2) கடந்த 19-03-1966 அன்று தமிழக அரசால் பொன்னுசாமி என்பவருக்கு இலவச வீட்டு மனைப் பட்டா மூலம் வழங்கப்பட்ட இடம் தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். மேற்படி வீட்டு மனைப் பட்டா படி பொன்னுசாமி அச்சொத்தில் பட்டா தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் வீடு கட்டி இருக்க வேண்டும் என்றும் அந்த நிபந்தனையை அவர் பூர்த்தி செய்யாததால் அவரது பட்டா ரத்து செய்யப்பட்டது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ.2 ஆவணத்திலும் வெங்கிடுசாமி கிரையம்பெற்ற வா.சா.ஆ. 6 ஆவணத்திலும் கிரையச் சொத்துக்கள் காலியிடமாக இருந்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அங்கு சாளை இருந்தது இருப்பினும் நாங்கள் காலியிடமென குறிப்பிட்டுள்ளோம்.

4) அரசு இலவச பட்டா வழங்கிய தேதியிலிருந்து நாளது தேதி வரை வழக்கு சொத்து காலியிடமாக தான் உள்ளது என்றால் நாங்கள் கிரையம் பெற்ற பிறகு கட்டிடம் அமைக்க செங்கல் முதலிய பொருட்கள் வைத்திருந்தோம். தற்காலிக சாளை அமைந்திருந்தோம். தற்போது வழக்கு சொத்தில் எந்த சாளையும் இல்லை என்றால் சரிதான். மேற்சொன்னவாறு எப்போது செங்கல் முதலிய பொருட்கள் வைத்திருந்தோம் என்றால் கொரோனா கால கட்டத்தில் வைத்திருந்தோம்.

5) 1 ம் பிரதிவாதி கப்பளாங்கரை ஊராட்சி மன்ற தலைவரின் கணவர் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை ஆக்கிரமிக்க முயற்சித்த போது ஊராட்சி மன்றம் அதனை தடுத்ததால் ஊராட்சி மன்றத்தின் மீது வழக்கு தாக்கல் செய்யாமல் பிரதிவாதிகள் மீது தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கடந்த 2010-2011 ஆண்டில் ரூ. 1,20,000 செலவில் வழக்கு சொத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த மைதானம் வழக்கு சொத்திற்கு வடதிசையில் தள்ளி உள்ளது. மைதானம் தள்ளி உள்ளதாக நான் கூறுவது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல.

6) வழக்கு சொத்து பட்டா யார் பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்து பட்டா தமிழக அரசு பெயரில் உள்ளது என்றால் நாளது தேதியில் யார் பெயரிலும் பட்டா இல்லை நாங்கள் பட்டா கோரி மனு தாக்கல் செய்திருந்தோம் அதற்குள்

இவ்வழக்கு தாக்கல் செய்து விட்டதால் பட்டா மனு நிலுவையில் உள்ளது. அவ்வாறு பட்டா மனு நிலுவையில் உள்ளதை காட்டும் விதமாக நான் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து அரசு இடம் என்பது கிரைய சமயத்திலேயே எனக்கு தெரியும் என்றும் அதனால் அதனை காரணம் காட்டி என் முன்பாத்தியஸ்தரமிருந்து குறைந்த விலைக்கு கிரையம் பெற்றுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7) வழக்கு சொத்தை பிரதிவாதிகள் என்னிடம் குறைந்த விலைக்கு கிரையம் கேட்டதாகவும் அதனை நான் மறுத்ததால் பிரதிவாதிகள் வழக்கு சொத்தை ஆக்கிரமிக்க முயற்சித்தாகவும் தொடர்ச்சியாக இடையூறு செய்ததாகவும் நான் கூறி இருப்பது வழக்கிற்காக நான் சொல்லியுள்ள பொய் என்றால் சரியல்ல. பொள்ளாச்சி சார் ஆட்சியர் பட்டா ரத்து செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பட்டா ரத்து செய்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2001-2003 கால வாக்கில் எனக்கு தெரிய வந்தது. வழக்கு சொத்து நான் 2011 ல் தான் கிரையம் பெற்றேன் என்றால் நான் 2001ல் கிரையம் பெற்றேனா 2011 ல் கிரையம் பெற்றேனா என தெரியவில்லை. கிரையம் பெற்று சுமார் 20 , 25 ஆண்டுகள் இருக்கும் . நான் கிரையம் பெற்ற பிறகு தான் பட்டா ரத்து விவரம் எனக்கு தெரியும் .

8) தமிழக அரசுக்கு எனக்கும் வழக்கு சொத்தின் உரிமை மீது நான் கிரையம் பெற்ற பிறகிலிருந்தே பிரச்சனை உள்ளது என்றால் 2012 -2013 லிருந்து உள்ளது. நான் என் வழக்குரையில் மேற்படி வழக்கு சொத்து உரிமை பிரச்சனைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கப்பளாங்கரை பஞ்சாயத்தையும் , தமிழக அரசையும் நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கிணத்துக்கடவு வட்டாட்சியரும் பொள்ளாச்சி சார் ஆட்சியரும் வழக்கு சொத்தின் மீது எடுத்த நடவடிக்கைகளை மறைத்து தான்

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேற்படி வட்டாட்சியரும் , சார் ஆட்சியரும் வழக்கு சொத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

9) பிரதிவாதிகள் வழக்கு சொத்து குறித்து எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அபகரிக்கும் நோக்கில் பொய்யான சங்கதிகள் கண்டு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**ஒப்பம் /- ( மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி